# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

Deposition of Witness for : DW-1 | Date : 19.09.2024

Case No. : O.S. 353/2019 | Nationality : Indian

Name : முருகன் | Religion :

Father's/Husband's Name : ராமன் | Age : 47

Village :

Taluk :

<u>பி.வா.சா.1</u>

சாட்சி சத்திய பிரமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தற்போது சூரியனார்கோவில் ஊராட்சி மன்ற தலைவராக உள்ளேன் என்றால் சரிதான். நான் அதற்கு முன்பாக சூரியனார்கோவில் ஊராட்சி மன்றத்தில் துணைதலைவர் மற்றும் கவுன்சிலராக பதவி வகித்துள்ளேன் என்றால் சரியல்ல., 1ம் பிரதிவாதி எனது மாமியார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் சித்தப்பா மகன் வாதி ஆவார். 1ம் பிரதிவாதி வசந்தா தற்போது என்னுடன் உள்ளாரா என்றால் உள்ளார். 1ம் பிரதிவாதிக்கு சுந்தர்ராஜன் என்று ஒரு மகன் இருந்தார் என்றால் சரிதான். அவர் இறந்துவிட்டார். தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு ஆதி திராவிட நலத்துறையால் வழங்கப்பட்ட இலவச மனை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் தகப்பனார் மாரிமுத்து இறப்பதற்கு முன்பாக 1999 ம் ஆண்டிலிருந்தே வாதி தாவா சொத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல.

2. தாவா சொத்தினை 1ம் பிரதிவாதியின் தகப்பனாரிடம் இருந்து 02.09.1999 ம் தேதி வாதி பதிவு செய்யப்படாத ஆவணம் மூலம் கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி

கிரய ஆவணத்தில் 1ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதியின் மகன் மற்றும் மகள் மற்றும் தெருக்காரர்கள் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் மேற்படி ஆவணம் வழக்கிற்காக பொய்யாக தயார் செய்யப்பட்டுள்ளது. அன்றைய தேதி முதல் தாவா சொத்தில் வாதிதான் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. அதற்கு அருகில் உள்ள நீர்நிலை புறம்போக்கில் குடியிருந்து வருகிறார் . வாதி தாவா சொத்தில் குடியிருந்து வருவதற்கு மின் இணைப்பு பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதி குடியிருந்து வருவதற்கு 1ம் பிரதிவாதிக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்றாலும் நான்தான் 1ம் பிரதிவாதியை தூண்டுதல் செய்து இவ்வழக்கில் ஆஜராகி வருகிறேன் என்றாலும் சரியல்ல.

**(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது).**

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/-N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.